கண்காணிப்புப்பொறியாளர்/ இயக்குநர்,பொபது.,பொதுப்பணிப்பணியாளர் பயிற்சி நிலையம், திருச்சிராப்பள்ளி-20 அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: **பொறி.R.உஷாபாய்,B.Sc. (Engg.),**
கண்காணிப்புப் பொறியாளர்/ இயக்குநர்,பொபது, கூ/பொ

செயல்முறைஆணைஎண்: 38 M/கோ.6/2019/நாள் 16.07.2019.

பொருள்: பணியமைப்பு- தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி-தமிழ்நாடுஅரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடிநியமனம் - செல்வி **M.திவ்யபாரதி**, இளநிலை உதவியாளராக இவ்வியக்குநர் அலுவலகத்தில் 11.03.2019 மு.ப. முதல் பணிமேற்கொண்டது - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தும்,தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. முதன்மை தலைமைப் பொறியாளர்(நீஆது) மற்றும் தலைமைப் பொறியாளர்(பொது), பொபது., சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்.3(3)/25366/2019/நாள்: 25.02.2019
2. இவ்வியக்குநர் அலுவலக செயல்முறை ஆணை எண்: 8எம்/ஆர்.எப்.6/(169) 2019/ நாள்: 11.03.2019

********

**ஆணை:**

பார்வை1-ல் காணும் முதன்மை தலைமைப்பொறியாளர்(நீஆது) மற்றும் தலைமைப் பொறியாளர்(பொது), பொபது., சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணையின்படி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்பட்ட 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018ஆம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான போட்டித் தேர்வின் மூலம் தெரிவுசெய்யப்பட்டு, பார்வை 2-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணை மூலமாக உரிய மறுபணியமர்வாணை வழங்கப்பட்டு செல்வி **M.திவ்யபாரதி**, இளநிலை உதவியாளராக, இவ்வியக்குநர் அலுவலகத்தில் 11.03.2019 முற்பகல் பணிமேற்கொண்டு தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

**செல்வி M.திவ்யபாரதி**, இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான11.03.2019 முற்பகல் முதல் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016-ன் விதி28(1)-ன் படியும், சென்னை உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான தேர்வு தொகுதிIV-ன் தொடர்பாக தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்பிற்கு உட்பட்டது என்ற நிபந்தனையுடனும் இளநிலை உதவியாளர் பதவியில் 11.03.2019 மு.ப. முதல் பணிவரன்முறை செய்தும், தகுதிகாண் பருவத்தினை துவக்கி வைத்தும் இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

தபிபா.,

Scanned by CamScanner

இவர் மூன்றாண்டுகாலதொடர் பணிக்காலத்திற்குள் இரண்டாண்டுகாலத் தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும் எனவும் தகுதிகாண் பருவகாலத்திற்குள் பவானிசாகர் அரசுப்பணியாளர் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சிபெறவேண்டும் எனவும் ஆணை வழங்கப்படுகிறது.

இவர் தகுதிகாண் பருவகாலத்திற்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறைத் தேர்வில் தேர்ச்சி பெறுதல் மற்றும் பவானிசாகர் அடிப்படை பயிற்சி பெறுதல் ஆகிய நிபந்தனைகளை பூர்த்தி செய்யவேண்டும். மேலும் தகுதிகாண் பருவகாலத்தில், எந்தவித விடுப்பில் சென்றாலும், (தற்செயல் விடுப்பு மற்றும் மதச்சார்பு விடுப்பு நீங்கலாக) அதற்கேற்ப தகுதிகாண்பருவம் நிறைவு காலத்திற்கான நீட்டிப்பு ஆணை பிறப்பிக்கப்படும் என்பதும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்பு பொறியாளர்,/இயக்குநர்(கூ/பொ)
பொதுப்பணிப்பணியாளர் பயிற்சி நிலையம்,
திருச்சிராப்பள்ளி-20.

பெறுநர்
செல்வி M.திவ்யபாரதி,
இளநிலை உதவியாளர்,பொபது.,
பொதுப்பணி பணியாளர் பயிற்சி நிலையம்,
திருச்சிராப்பள்ளி-620 020.

நகல்: கருவூல அலுவலகம்,
மாவட்ட கருவூலம்,
திருச்சி.

உபரிநகல்: கோப்பிற்கு.

SUPERINTENDING ENGINEER / DIRECTOR
Public Works Staff Training Institute
Tiruchirapalli - 620 020.

Scanned by CamScanner